உ
சிவமயம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் கணபதி வைரமுத்து

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# வைர மலர்

19.12.2014

உ

சிவமயம்



கோண்டாவில் வடக்கைப்

பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கணபதி வைரமுத்து

*அவர்களின் சிவபதப்பேறு குறித்து*

*வெளியிடப்பெற்ற*

# வைர மலர்

19.12.2014

*எமது அன்புத் தெய்வத்தின்*
*பொன்னடிகளிற்கு இந்நூல்*

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்

கண்ணை இமை காப்பது போல

எம்மை எல்லாம் காத்து

எங்கள் வாழ்க்கைத் தேரோட

அச்சாணியாக இருந்த

எமது குடும்பத் தலைவர்

அமரர் கணபதி வைரமுத்து

அவர்களின் பாதக் கமலங்களில்

இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

உ
சிவமயம்

## எங்கள் அன்புத் தெய்வம்



அன்னையின்
அணைப்பில்
06 ✦ 05 ✦ 1930

ஆண்டவன்
அழைப்பில்
19 ✦ 11 ✦ 2014

# அமரர் கணபதி வைரமுத்து

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

சீர்பொலியும் ஜயவருடம் தேர்கார்த்திகைத் திங்கள்
நேர் நிறையும் துவாதசியாம் நற்திதியில் - பார்போற்றும்
நல்லார்கண பதிவைரமுத்து நாம்பணியும் இறைவனவன்
நல்லடிசேர் நாளிதுவென நினை!

# திருமுறைப் பாடல்கள்
## பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைய மர்ந்தாரே.

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோன குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

*அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்*
*புன்கணீர் பூசல் தரும்.*

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.*

# அமரர் கணபதி வைரமுத்து

## அவர்களது

# வாழ்க்கை வரலாறு

கணபதி சின்னாச்சி தம்பதியரின் இளைய மகனாகப் பிறந்து செல்லர் பார்வதி தம்பதிகளின் மூத்த மகளான பவளம் என்பவரை திருமணம் செய்து, சீரும் சிறப்புடனும் ஊர்போற்ற நல்லவராக வாழ்ந்தார். இத்தம்பதிகள் 5 ஆண் பிள்ளைகளையும், 2 பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்து "தந்தை மகற்காற்றும் உதவி" என்ற வள்ளுவரின் குறளிற்கேற்ப பிள்ளைகளை நல்ல கல்விமான்களாக ஊர் போற்ற வாழ்ந்தார். அக்காலப்பகுதியில் சமயத் தொண்டு, சமூகத் தொண்டு, கலைத் தொண்டு ஆகியவற்றில் பங்கேற்று மற்றவர்கள் போற்றும் வண்ணம் வாழ்ந்தார். அவ்வாறே அவர் பிள்ளைகளும் வளர்ந்தனர். பேரப்பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து எஞ்சினியராக, டாக்டராக, மிருதங்க வித்துவானாக, பல்கலைக்கழக மாணவராக, உயர்கல்வி பயில்பவர்களாக பேரனின் வழிகாட்டலில் உருவாகினர். அதோடு நின்றுவிடாது உற்றார், உறவினர்களுக்கும் நல்வழிகாட்டியாக விளங்கி தனது 85வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

**குடும்பத்தினர்.**

வெள்ளத்தால் அழியாதது, வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் முடியாதது, கொடுத்தால் நிறைவொளிய குறைபடாதது
கள்வர்க்கோ மிகஅரிது, காவலோ மிக எளிது
உள்ளத்தே கல்வி எனும் பொருள் இருக்க
உலக மெலாம் அலைவ தேனோ?

# நிலையிழந்தோம்

அப்பா நாங்கள் உங்களை
இங்கு நினைத்து நிற்கையிலே
இப்போதும் நீங்கள் எம்மோடு
இருப்பது போலவே உணர்கிறோம்
எப்போதும் எங்களை நினைந்து
நன்றாக நாளும் உழைத்தீர்கள்
அப்பா உங்களின் மறைவை
எங்களால் எண்ணவே முடியவில்லை!

அறிவை ஊட்டி உலகை
அறிய வைத்த உத்தமரே
நெறிவழி நல்ல பண்பை
நயந் துரைத்த செம்மலே
குறிக்கோள் வகுத்து எமக்கு
நல்வழி காட்டிய தெய்வமே
குறிக்கோளுடனே நாம் நன்றே
மண்ணில் காரியம் ஆற்றுகிறோம்!

கல்வியில் நன்கு உயர்ந்தோம்
குறள்வழி பற்றுடன் நடக்கின்றோம்
வல்லமை மேவ என்றும்
நற்பணி ஆற்றி வருகின்றோம்
எல்லோரும் இன்புற்று இருக்கையிலே
அந்தகன் வந்தே உம்
நல்லுயிரை காவு கொண்டதினால்
நிலையிழந்து நாம் நிற்கின்றோம்!

**பிள்ளைகள்**
**வை.சந்திரசேகரம், வை.குணநாயகம்,**
**வை.வேதநாயகம், வை.புனிதநாயகம்,**
**வை.மோகனதாஸ், சே.நந்தினி.**

# சொந்தங்களை மதித்தவரே!

மக்களுக்கு வந்த மருமக்களாய் கருதாமல்
மக்கள் போலவே எம்மை மதித்தவரே
எக்கணமும் நல்லவை கூறி யெம்மை
இனிது மனம் குளிரச் செய்தவரே
தக்க தருணத்தில் மந்திரி யாயிருந்து
செயலாற்ற தக்க நல்வழி சொன்னவரே
துக்கமது நெஞ்சமதை வருத்த நாமிங்கு
தேற்றுவார் இன்றி தினம் தவிக்கின்றோம்!

சாந்மார் முகமும் வாய் நிறை புன்னகையும்
சொந்தங்கள் அன்பும் உறவுடன் நேசமும்
காந்தக் கவர்வும் கனமான சொல்லும்
கருணை நெஞ்சும் கனிவுநிறை பார்வையும்
ஏந்தும் பொறுப்பும் உதவும் பாங்கும்
எதையும் எதிர்கொள் பெருந் திறனும்
ஏந்தவே எம்மாமா உம்மிட மின்றியினி
ஆரிடம் இங்கு நாம் காண்போம்!

**மருமக்கள்.**
**ச.ரஞ்சிதாதேவி, கு.குகேஸ்வரி,**
**வே.திலகேஸ்வரி, வ.வேலாயுதம், பு.சசிகலா,**
**மோ.உமா, தெ.சேகர்.**

***இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்***
***நல்லாற்றின் நின்ற துணை.***

***துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான்***
***என்பான் துணை.***

# வேதனைதான் முடிவாமோ?

அப்பப்பா தாத்தா வென்று
அணைத்து முத்தமிட் டதனை
மறந் தெங்க சென்றீர்!

அப்பப்பா தாத்தா நீங்கள்
தேசம் விட்டு தேசம் வந்து
அன்பு காட்டியதை மறந்ததேனோ!

அப்பப்பா தாத்தா உங்கள்
வாயால் இன்பத் தமிழ்
கேட்கவும் முடியாமல் போனதே!

அப்பப்பா தாத்தா எம்மை
பேரரென்று அணைத்து
மகிழ்ந்த கரமெங்கே!

அப்பப்பா தாத்தா மண்ணில்
வாழ்வாங்கு வாழ்ந்து விட்டேன்
என்று ஓடிநீ ஒழிந்தனையோ!

அப்பப்பா தாத்தா உலகில்
பிறப்பவர்கள் ஒருநாள் இறப்பர்
என்பதை உணர வைத்தனையோ!

அப்பப்பா தாத்தா என்று
இனி யாரை நாமழைப்போம்
வேதனை தான் எம் முடிவோ!

**பேரப்பிள்ளைகள்.**

**ச.ரீபசேகரம், ச.நிரஞ்சினி, கு.துவாரகா, கு.கௌசிகன், வே.திரியாம்பகி, வே.சஞ்சீவன், வே.றஜீவன், வே.அயலக்ஷன், வே.சுகிர்தினி, பு.இலக்கியா, பு.இகலியா, பு.இனியாள், மோ.பிரணவி, சே.சகிலா, சே.மிலானி, சே.கௌசல்யா**

# ஊரவர், அயலவர் அவலம்

சொல்லால் வசீகரித்து செயலால் உளங்கவர்ந்து
எல்லோரும் வாழ்த்த இதமுறவே – நல்லாற்றல்
கொண்டிருந்த நல்லவரே காலனும்மை கவர்ந்தனனோ
கண்ணீர்விட்டு கதறுகிறோம் காண்!

ஞான வைரவரின் ஆசிபெற்ற நற்பண்பு நிறைந்தவரே
ஆன நற்பணிகள் ஆற்றி தில்லையம்பதியை – வானுயர
வைத்தவரே முன்னாள் மணியகாரரே வைரமுத்துவே
நித்தமும் நினைவோம் நன்றே!

நெற்றியில் திருநீறும் நிறைந்த சந்தணமும்
பொற்புறவே அணியும் புண்ணியரே – பற்றுடன்
நீர்செய்த பெரும்பணியை நாம் சார்ந்த
ஊரார் நினைப்பர் என்றும்!

அருமை நிறை வைரமுத்தரே ஊருவந்த பெருமகனே
உருவமது மறைந்ததுவோ உலகில் – பெருந்
துயரம் கொண்டு திசைமாறும் படகானோம்
அயலார் ஊரவரென்று அறி!

பணக்கார மாதன் பரம்பரையில் வந்தாலும்
குணத்தால் நிறைவு கொண்டீர் – மணம் முடித்த
பவளமும் மகள் சுகுணாவதியும் அழைத்து பரமனவன் பாதமலர்
உவந்து போனீரோ ஐயா!

> ***தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு***
> ***ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.***

# கவியின் கூற்று

செல்வம் நிறைய இருந்திடினும்
செல்லும் வழிக்கு வருவதில்லை
அல்லும் பகலும் உழைத்திடினும்
அவையாவும் இந்த மண்மட்டே
பொல்லா விதியின் வழிப்படியே
போகும் வாழ்வு என்றறிந்து
செல்வோருக்காக வேண்டி இங்கே
தலைவன் பாதம் பணிவோம்!

சோலையில் மலரும் பூக்கள்
வாசனை தந்தும் கூட
மாலையில் மடிந்து வீழும்
வேலையில் தோன்ற வரும்
அலைகள் பொங்கி எழுந்து
கரைதனில் அழிந்து போகும்
நிலையில்லா மனித வாழ்வின்
நிலையதும் இதுவே யாகும்!

நல்ல வழிபாடும் நாம் செய் நன்மைகளும்
எல்லை வரைக்கும் இதம் செய்யும் – அல்லலின்றி
தேற்றம் அடைவீர் திருவருளை வேண்டி நின்றே
போற்றும் இறையடியே பொன்!

**கலாபூசணம் அரியாலையூர்**
**சி.சிவதாசன்**
**சமாதான நீதிவான்.**

***பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை***
***வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.***

## அழுகை தணிய வேண்டும் வாழ்வு தொடர வேண்டும்

எந்தத் துயரினைக் கொட்டி நாம் அழுதாலும்
போனவர் போனதுதான்
சின்ன வயதென்ன ஆறென்ன நூறென்ன
சாவந்தால் வந்ததுதான்
ஆண்டவர் வகுத்திட்ட இந்த விதியினை
ஆராலும் வெல்லலாமோ
மாண்டவர் உயிர் பெற்று மீண்டும் வருவதை
மாநிலம் கண்டதில்லை
இந்த நடைமுறை இங்கு இருப்பதால்
இதயத்தை தேற்றிடுவோம்
சொந்த உயிரது போனது துக்கந்தான்
சிந்தித்து ஆறிடுவோம்!

## இறைவா! உன் செவிகளுக்கு

சாவுக்கு சாவு வரக்கூடாது
ஏனென்றால் வாழுகின்ற
மட்டுக்கும் மனிதனவன்
எங்கு செல்வான் பூவுலகில்

ஆனாலும் எந்த உயிர்
சாக வேண்டும்
எந்த உயிர்வாழ வேண்டும்
என்றமதி இறைவனுக்கு
வரவேண்டும் வந்து விட்டால்
அது போதும்

கதறலும் கத்தலும் புலம்பலும்
குமுறலும் பதறலும் குறைந்து விடும்
வேதனையும் தணிந்து விடும்
இறைவா இது உன் செவிகளுக்கு

## 50வது பொன்விழாவில் பொலிந்து காணப்படும் தம்பதிகள்



# கணவன் மனைவி அற்புதமான விடயங்கள்

கணவன் மனைவி ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அற்புதமான விடயங்கள். கணவன் மண வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே அனைவருக்கும் மகிழ்வாய் குடும்பம் நடத்த ஆசைதான். அது சிலருக்கு எளிதாகவும் அனேகருக்கு சிரமமாகவும் இருக்கிறது. இதற்காக பின்வரும் முக்கிய விடயங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

01. குடும்ப மகிழ்ச்சிக்கு என்ன தேவை?
02. கணவன், மனைவி எதிர்பார்ப்புகள் என்னென்ன?
03. குழந்தைகளை தன்னம்பிக்கையுடன் வளர்ப்பது எப்படி?
04. குடும்ப மகிழ்ச்சியில் உறுப்பினர்களின் பங்கு என்ன?
05. வரவு, செலவை வரையறுப்பது எப்படி?

## குடும்ப மகிழ்ச்சிக்கு எது தேவை?

01. வருமானம்
02. ஒத்துழைப்பு
03. மனித நேயம்
04. பொழுதுபோக்கு
05. ரசனை
06. ஆரோக்கியம்
07. மனப்பக்குவம்
08. சேமிப்பு
09. கூட்டு முயற்சி
10. குழந்தைகள்

## கணவனிடம் மனைவி எதிர்பார்ப்பது என்ன?

01. அன்பாக, பிரியமாக இருக்க வேண்டும்.
02. மனது புண்படும்படி பேசக் கூடாது.
03. கோபப்படக் கூடாது
04. சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது
05. பலர் முன் திட்டக்கூடாது.

06. எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்க கூடாது.

07. முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.

08. மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

09. சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்.

10. மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும். மதிக்க வேண்டும்.

11. வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வேண்டும். பாராட்ட வேண்டும்.

12. பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ளவேண்டும்.

13. வாரம் ஒருமுறையாவது மனம் விட்டுப் பேச வேண்டும்.

14. மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.

15. ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.

16. பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.

17. ஒளிவு மறைவு கூடாது.

18. மனைவியை நம்ப வேண்டும்.

19. முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.

20. மனைவியிடம் அடுத்த பெண்ணைப் பாராட்டக் கூடாது.

21. அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்தவளே அழகிலும் குணத்திலும் சிறந்தவள் என்றெண்ணி சந்தோசப்பட வேண்டும்.

22. தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.

23. உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.

24. சின்ன சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.

25. சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.

26. குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் "இது உன் குழந்தை" என்று ஒதுக்கக் கூடாது.

27. அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிடமும் காட்ட வேண்டும். ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட, அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்கக் கூடியவள் மனைவி.
28. நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
29. சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
30. எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டுச் செல்ல வேண்டும்.
31. சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
32. எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
33. மனைவியின் பிறந்தநாள் தெரிய வேண்டும்.
34. மனைவிக்குப் பிடித்தவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்
35. பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
36. மனைவி வீட்டாரைக் குறை சொல்லக் கூடாது.
37. கைச் செலவுக்கு பணம் தர வேண்டும்.

## மனைவியிடம் கணவன் எதிர்பார்ப்பது என்ன?

01. காலையில் முன் எழுந்திருத்தல்.
02. பள்ளி அலுவலக நேரம் தெரிந்து அதற்கு முன் வேண்டியவற்றைத் தயாரித்தல்.
03. எப்போதும் சிரித்த முகம்.
04. நேரம் பாராது உபசரித்தல்.
05. மாமியாரை தாயாக மதிக்க வேண்டும்.
06. கணவன் வீட்டாரிடையே அனுசரித்துப் போக வேண்டும்.
07. எதற்கெடுத்தாலும் ஆண்களைக்குறை சொல்லக் கூடாது.
08. அதிகாரம் பண்ணக் கூடாது.
09. குடும்ப ஒற்றுமைக்கு உழைக்க வேண்டும். அண்ணன், தம்பி பிரிப்பு கூடாது.
10. கணவன் குறைகளை வெளியே சொல்லக் கூடாது. அன்பால் திருத்த வேண்டும்.

11. கணவனை சந்தேகப்படக் கூடாது.
12. குடும்பச் சிக்கல்களை வெளியே சொல்லக் கூடாது.
13. பக்கத்து வீடுகளில் அரட்டை அடிப்பதைக் குறைக்க வேண்டும்.
14. வீட்டுக்கு வந்தவுடன், சாப்பிடும் போது சிக்கல்கள் குறித்துப் பேசக் கூடாது.
15. கணவர் வழி உறவினர்களையும் நன்கு உபசரிக்க வேண்டும்.
16. இருப்பதில் திருப்தி அடைய வேண்டும்.
17. அளவுக்கு மீறிய ஆசை கூடாது.
18. குழந்தை படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.
19. கொடுக்கும் பணத்தில் சீராகக் குடும்பம் நடத்த வேண்டும்.
20. கணவரிடம் சொல்லாமல் கணவரின் சட்டைப் பையிலிருக்கும் பணத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.
21. தேவைகளை முன்கூட்டியே சொல்ல வேண்டும்.
22. எதிர்காலத் திட்டங்களைச் சிந்திக்கும் போது ஒத்துழைக்க வேண்டும்.
23. தினமும் நடந்ததை இரவில் சொல்ல வேண்டும்.
24. தாய் வீட்டிலும் கணவரை குற்றம் சொன்னால் மறுத்துப் பேச வேண்டும்.
25. அடக்கம், பணிவு தேவை. கணவர் விருப்பத்துக்கு ஏற்றாற் போல் ஆடை, அலங்காரம் செய்ய வேண்டும்.
26. குழந்தையைக் கண்டிக்கும் போது எதிர்வாதம் கூடாது.
27. சுவையாகச் சமைத்து, அன்புடன் பரிமாற வேண்டும்.
28. கணவர் வீட்டுக்கு வரும் போது நல்ல தோற்றம் இருக்கும்படி வீட்டை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும்.
29. பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
30. உரையாடலில் தெளிவாகப் பேசுவதுடன், பொருத்தமான முறையில் எடுத்துரைக்கும் விதமும் தெரிய வேண்டும்.
31. தேவையற்றதை வாங்கிப் பண முடக்கம் செய்யக் கூடாது.
32. உடம்பை கனகச்சிதமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

# பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையை ஊட்டி வளர்ப்பது எப்படி?

தன்னம்பிக்கை என்பது மனித வாழ்க்கைக்கு ஒரு நெம்புகோல் போன்றது. அது இல்லையேல் வாழ்க்கை இல்லை. இதனைப் பெற்றோர் தம் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். சுயமாகச் சிந்திக்க, சுயமாகச் செயற்பட குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். படிப்பில், அதோடு கூட வீட்டு வேலைகளில் குழந்தைகளுக்குப் பெற்றோர் போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.

குழந்தைகளை அச்சுறுத்தி அடித்துக் கண்டிக்கக் கூடாது. ஆனாலும் அதன் போக்கில் எதேர்ச்சையாக விட்டுக்விடக் கூடாது. குழந்தைகளுக்கு அன்புப்பால் ஊட்டி, அரவணைத்துப் பெருமைப் படுத்த வேண்டும். "நீ ராசா அல்லவா?, ராசாத்தி அல்லவா?" என்கிற வாசகங்கள் பெற்றோர் வாயிலிருந்து வர வேண்டும். மக்கு, மண்டு, மண்டூகம் போன்ற வாசகங்கள் மலையேற வேண்டும்.

பயம், கூச்சமின்றி, உறுதியான நெஞ்சம், உண்மையான பேச்சு, உயர்வான பண்பு இவை குழந்தைகளுக்கு அமைய முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும்.

***அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.***

***அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவ எவன்.***

***இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை.***

# அப்பாவுக்கு என்ன தெரியும்?
# தந்தையைப் பற்றி மகன்!

5 வயது : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.

7 வயது : என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்.

10 வயது : என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியாது.

12 வயது : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

14 வயது : அவரா? அவருக்குக் காலம் மாறியது எங்கே புரிகிறது?

21 வயது : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா?

35 வயது : ஏதோ கொஞ்சம் தெரியும்.

40 வயது : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே.

45 வயது : அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாமே.

50 வயது : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

55 வயது : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.

60 வயது : அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே...?

**உன்னை வயிற்றில் சுமக்கும் பாக்கியம்**
**எனக்கு இல்லை...**
**ஆகையால் என் நெஞ்சில் சுமந்து**
**தீர்த்துக் கொள்கிறேன்...!**

*இப்படிக்கு,*
*அப்பா*

# ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ✧ | 01 | காகித விழா | – | Paper |
| ✧ | 02 | பருத்தி விழா | – | Cotton |
| ✧ | 03 | தோல் விழா | – | Leather |
| ✧ | 04 | பூ, பழ விழா | – | Silk |
| ✧ | 05 | மர விழா | – | Wood |
| ✧ | 06 | இரும்பு விழா | – | Iron |
| ✧ | 07 | செம்பு விழா | – | Copper |
| ✧ | 08 | வெண்கல விழா | – | Electrical |
| ✧ | 09 | மண்கல விழா | – | Pottery |
| ✧ | 10 | தகர விழா | – | Tin |
| ✧ | 11 | எஃகு விழா | – | Steel |
| ✧ | 12 | லினன் விழா | – | Lenen |
| ✧ | 13 | பின்னல் விழா | – | Lace |
| ✧ | 14 | தந்த விழா | – | Ivory |
| ✧ | 15 | படிக விழா | – | Crystal |
| ✧ | 20 | பீங்கான் விழா | – | China |
| ✧ | 25 | வெள்ளி விழா | – | Silver |
| ✧ | 30 | முத்து விழா | – | Pearl |
| ✧ | 40 | மாணிக்க விழா | – | Ruby |
| ✧ | 45 | இரத்தின விழா | - | Sapphire |
| ✧ | 50 | பொன் விழா | – | Gold |
| ✧ | 55 | மரகத விழா | – | Emerald |
| ✧ | 60 | வைர விழா | – | Diamond |
| ✧ | 75 | பவள விழா | – | Platinum |
| ✧ | 100 | நூற்றாண்டு விழா | – | Century |

# உறவுகள் மேம்பட...

* நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
* அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே யிருப்பதை விடுங்கள். (Loose Talks)
* எந்த விஷயத்தையும், பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள், (Diplomacy) விட்டுக்கொடுங்கள். (Compromise)
* சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத் தான் ஆக வேண்டும் என்று உணருங்கள். (Tolerance)
* நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள், (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindedness)
* உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)
* மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)
* அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
* எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள்.
* கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்.
* அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
* உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)
* மற்றவர் கருத்துக்களைச் செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். (Misunderstanding)
* மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும். இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
* புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
* பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
* அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
* பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில்

06 ★ 05 ★ 1930

ஆண்டவன் அடியில்

19 ★ 11 ★ 2014

அமரர்

# உயர்திரு கணபதி வைரமுத்து

உறவுகளின் காப்பகமாய் இருந்து வந்தாய்
ஊர் பொருளை காப்பதில் பெட்டகமாய் இருந்து வந்தாய்
ஊருக்கு உயர்வான பணிகள் பல செய்து வந்தாய்
உற்றார் பேர் சொல்ல உயர்ந்து நின்றாய்
கரைப்பாதை கதிர்காமம் 40 வருடம் உன் சகோதரி சென்று வந்தார்
தப்பாமல் ஆகமத்தில் பல பேறு கண்டாய்
மாதன் (பணக்கார மாதன்) கோத்திரத்தின் காத்திரத்தை பக்குவமாய் காத்து வந்தாய்
போதையை தீண்டாமல் பெருவாழ்வு கண்டாய்
உன் செல்வங்கள் அவயத்து முன்னிருக்க அயராது உழைத்து வந்தாய்
அத்தனைக்கும் முத்தான சொத்தாக எங்களுக்கு நீ இருந்தாய்.

தந்தை மகற்காற்றும் நன்றி
அவையத்து முந்தியிருப்பச் செயல்
மகன் தந்தை காற்றும் உதவி
இவன் தந்தை என்னோற்றான் கொல் என்றும் சொல்.

*அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
23.11.2014

பிரிவால் துயருறும்
சீ.குணநாயகம் (குணசிங்கம்)
*மருமகன்*

# கண்ணீர் காணிக்கை



பிறப்பு 06 * 05 * 1930

இறப்பு 19 * 11 * 2014

கொட்டைக்காடு இந்து மயான அபிவிருத்திச் சபையின் உப செயலாளர்
திரு.வ.சந்திரசேகரம் அவர்களின் அன்புத் தந்தையார்

# அமரர் கணபதி வயிரமுத்து

*(ஓய்வுபெற்ற மின்மாணி வாசிப்பாளர், நல்லூர் பிரதேச சபை)*

வயிரமுத்தென்னும் பெயர் கொண்டு
பெற்றவர்களின் சிறப்பினிலே வைரம்போல் வாழ்ந்தவரே
உற்ற துணையோடு என்றும் உறுதுணையாய் நின்றீரே
மனையாளும் மடிந்ததால் மதிதனை இழந்தீரோ - நாம்
கண்ணீராய் சொரியும் உறவுகளின் பாசம்
நெகிழ்ந்து கசியும் நீராய்ச் சொரிய
கூடிக் குலாவி மகிழ்ந்ததன் எச்சம்
ஆடிப் போய் அமர வைக்க
பழகிய நாட்கள் இளகிய மனதை நெகிழச் செய்ய
செய்து வந்த சேவைகள் விம்மியழ வைக்க
மெய்யெல்லாம் பொய்யாகும் மெய்யுணர்வு புரிந்தாலும்
மானிடத்தின் பலவீனம் ரணங்களாக்கி மறைந்தாலும்
கால வெள்ளத்தால் காலனவன் கவர்ந்திட்டாலும்
நேற்றிருந்தாரைத் தேடும் நினைவலையுடன் நாம்

***அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

**ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!**

**நா.சிவலோகநாதன் குடும்பத்தினர்**
*(நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்)*

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 06 . 05 . 1930

இறப்பு 19 . 11 . 2014

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமைகாத்து பக்குவமாய்வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகைபல செய்து
எல்லோருக்கும் நல்லவனாய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இரக்கமின்றி பறித்து விட்டான்
துன்புற்றோர் துயர்துடைத்து துணைக்கரமாய்
அடைக்கலம் தந்த உன்னை ஆண்டவன் ஏனழைத்தான்
பண்புள்ளோரைப் பல காலம் வாழவிடக் கூடாதென்றா?
என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல தில்லையம்பதியானை இறைஞ்சுகின்றோம்.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

**தில்லையம்பதி ஆலய**
**பரிபாலன சபை**

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு
ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பரிபாலன சபை
ஆரம்பகால உறுப்பினரும் முன்னாள் தேர்த்திருப்பணி சபை
பொருளாளரும், இராஜகோபுர திருப்பணி சபை பொருளாளரும்

## அமரர் கணபதி வைரமுத்து

0771974875

# கண்ணீர் காணிக்கை



மண்ணில்
06.05.1930

விண்ணில்
19.11.2014

கொட்டைக்காடு இந்து மயான அபிவிருத்திச் சபையின் உப செயலாளர்
திரு.வ.சந்திரசேகரம் அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் கணபதி வயிரமுத்து

*(ஓய்வுபெற்ற மின்மாணி வாசிப்பாளர், நல்லூர் பிரதேச சபை)*

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்து இன்று......
காற்றோடு கலந்துவிட்ட எம்மினியவரே!
கூற்றுவன் கொடியவன்
உங்களை ஏன் அழைத்தான் - நீங்கள்
மடிந்தீர்கள் என்பதை நம்பவே முடியவில்லை
சிரித்த உங்கள் முகம்
அன்போடும் பண்போடும் பேசும் உங்கள் உதடுகள்
மறக்குமா இனி எப்போதும்
பண்பாக பறைசாற்றும் உங்கள் அறிவுரைகள்
மறைந்தும் மறையாத சூரியனாய்
எப்போதும் எம் மனதில் வாழ்கின்றீர்கள்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயான
அபிவிருத்தி சபை நிர்வாகிகள்.

# கண்ணீர் காணிக்கை



தோற்றம்
06 ★ 05 ★ 1930

மறைவு
19 ★ 11 ★ 2014

வாகீஸ்வரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் கணபதி வயிரமுத்து

*அவர்கள்*

இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து நல்லறத்தில்
ஆண்டு பல கழித்து
விதியவன் வினைப் பயனால் விண்ணுலகுக்கு
சென்றுவிட்டீர்கள்
அன்பான பேச்சு, பண்பான குணம்
பாசமுடன் அரவணைக்கும் குணம் கொண்டவரே!
நொடிப்பொழுதில் எம்மைவிட்டு
எங்கு நீர் சென்றீரோ.

*அன்னார் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர்க் காணிக்கையை தெரிவிப்பதுடன்
அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையம்,
ஸ்ரீ வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகம்,
ஸ்ரீ வாகீஸ்வரி விளையாட்டுக் கழகம்.

# விழிநீரால் வழியனுப்பும் இதய அஞ்சலி



அன்னை மடியில் 06 . 05 . 1930

ஆண்டவன் பிடியில் 19 . 11 . 2014

கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

*அமரர்*

## *கணபதி வைரமுத்து*

(ஞானவைரவர் ஆலய முன்னாள் மணியகாரரும், செயலாளரும்)

எல்லோருக்கும் நல்லவராய்
உயர்வான பண்பாளராய் பிறந்து
இன்முகத்தோடும் புன்சிரிப்போடும்
அன்புடனும் பண்புடனும்
பணிவுடனும் வாழ்ந்து
மக்களை நல்லவராய் வாழ
அறிவுரைகள் பல கூறி
வழிகாட்டி வையத்துள் வாழ்ந்து
நல்லவராக வாழ்ந்த அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு.
23.11.2014.

துயருறும்
சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர்
ஆலய பரிபாலன சபையினர்.

# கண்ணீர் காணிக்கை



மண்ணில்
06
*
05
*
1930

விண்ணில்
19
*
11
*
2014

வாகீஸ்வரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் கணபதி வைரமுத்து

இறைவனின் நாமமே
உண்மையான வைரம்
அந்த நாமத்தின்
உறுதியே எங்கள்
முத்து!
இறைவனின் முத்து
எங்கள் சொத்து
அன்புச் சித்தப்பாவாய்
அருகிருந்த இறைவனும்
நீங்களே!
சரியைத் தொண்டுகளில்
அநுக்கிரகம் பெற்றவர்
எது வந்த போதிலும் இறை
நம்பிக்கை தளராதவர்
அதனால்
சர்வ செல்வங்களும் பெற்றவர்
மதிப்பாகவும் வாழ்ந்தவர்
எங்கள் வைர(ம்)முத்து!

**அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

V.V.K
"கமலாம்பிகா பவனம்"
வாகீஸ்வரி, கோண்டாவில்.

தங்களின் பிரிவால் துயருறும்
வ.வ.கயிலாசபிள்ளை குடும்பத்தினர்

# விழி நீர் சொரிகின்றோம்



அமரர்

## க.வைரமுத்து

பிறப்பு 06 . 05 . 1930

இறப்பு 19 . 11 . 2014

பூ ஒன்று பூத்திருந்து மணம் பரப்பி
வாசல் வரை நிறைந்திருந்தது!
நீண்ட கொடியென
ஒரு தொடர் கட்டி
அது ஆடி அசைந்திருந்தது!
மணம் நுகர்ந்து
சுகம் பெற்றுக் காத்திருந்தோம்!
பூமித்தாயின் புதையலுக்குப்
புதுப்பயணம் என்று புறப்பட்டுப்போனதேனோ?
நீங்கள் வாடி உதிர்ந்து விட்டபோதும்
உங்கள் வாடாத முகம் இன்னும்
எங்கள் நினைவுகளில்
நீட்சியடைந்து நீள்கிறது
என்றும்
உங்கள் நினைவுகளுடனேயே....
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**உம் பிரிவால் வாடும்**
**வே.கிருஸ்ணசாமி** (பொறியியலாளர்)
**குடும்பத்தினர்**
நீர்ச்சோலை,
சமரபாகு, வல்வெட்டித்துறை.

# கண்ணீர் அஞ்சலி

| உதித்தது | உதிர்ந்தது |
|---|---|
| 06 | 19 |
| 05 | 11 |
| 1930 | 2014 |



உடுப்பிட்டி மேற்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மகா சிவராத்திரி பூஜை செய்யும் உபயகாரரான வை. வேதநாயகர் அவர்களின் பாசமிகு தந்தையான

## அமரர் கணபதி வைரமுத்து

(மின்மானி வாசிப்பாளர், கிராமசபை, கொக்குவில்)

பூவுலகில் மானிடராய் பூத்துப் பொலிந்து
உதிர்ந்தோர் கோடானு கோடி
நிலையில்லா வாழ்வு என்று நினைப்பதில்லை.
விட்டு விட்டீர் பொய்க்கூட்டை – வேதனைதான்
இல்லறத்தில் நல்லறம் பேணி நலம் கண்டு
பிள்ளைகளுக்கு அன்பான ஒரு தந்தையாக
தந்தையெனும் வாழ்விற்கு முழு அர்த்தமாய் வாழ்ந்து
அவர்தம் சுவாசமாய் வாழ்ந்தீரே
காலவல்வினை நீக்கி நற்பேறுகளைத் தந்திட்டு
நற்கதி எய்திட விரைந்து சென்றீரோ!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரிவால் துயருறும்*

*2014ம் ஆண்டு நிர்வாகத்தினர்,*

*உடுப்பிட்டி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்.*

திருவள்ளுவர் அச்சகம், 590, பருத்தித்துறை வீதி, நல்லூர். தொ.பே 0771171872

# மறைவுச்செய்தி




## கணபதி வைரமுத்து

மறைவு:- 19.11.2014

துயரில்:-ஊடக உறவுகள்
நான்காம் அணி MRTC

# வம்சாவழி



கணபதி + சின்னாச்சி
வைரமுத்து
செல்லர் + பார்வதி
பவளம்
சந்திரசேகரம் + ரஞ்சிதாதேவி
ரீபசேகரம்
நிரஞ்சினி
குணநாயகம் + குகேஸ்வரி
துவாரகா
கௌசிகன்
வேதநாயகம் + திலகேஸ்வரி
திரியம்பகி
சஞ்ஜீவன்
ரஜீவன்
சுகுணாவதி + வேலாயுதம்
சுகிர்தினி
அயலக்ஷன்
புனிதநாயகம் + சசிகலா
இலக்கியா
இகலியா
இனியாள்
மோகனதாஸ் + உமா
பிரணவி
நந்தினி + சேகர்
சசிகலா
மிலானி
கௌசல்யா
அமரர்களைக் குறிக்கும்



# நன்றி மறப்பது நன்றன்று



அன்றந்த இறுதி நாளில் அஞ்சல் மூலம் அஞ்சலி செலுத்தியோர், ஆற்றொணா துன்பமுடன் வந்தோர், நின்று ஆர்வமுடன் உதவியோர், இழவோலை கிடைத்தவேளை வெளிநாடுகளில் இருந்து இரங்கல் உரை தெரிவித்தோர், ஈமக்கடன் நடந்தவேளை ஈவிரக்கத்துடன் கருமமாற்றியோர், உத்தரக் கிரியையை உவந்து செய்ய உயர்வுத் துணையுடன் உதவியோர், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித் தோர், மலர்வளையம் வைத்தோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட எமது அன்பு உள்ளங்களுக்கும், அஞ்சலிப் பதாகைகள் வழங்கியோர் அந்தியேட்டி கிரியைகள் நிறை வேற்றிய அந்தணச் சிவாச்சாரியர்கள் மேலும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலும் பங்குகொண்டு எமது தெய்வத் தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் பங்கு கொண்டோர் உறவினர்கள், நண்பர்களுக்கும் கவிவடித்த கவிஞருக்கும் மற்றும் இம்மலரை அழகுற அச்சிட்டு தந்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வீரபத்திரர் வீதி.**
**கோண்டாவில்.**

நன்றி



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

இல்லத்து அரசியுடன் இணைந்து இறைவழிபாட்டில்



சிவரஞ்சனம். T.P : 077 3068982